இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 156 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – தை 01 – செவ்வாய்க்கிழமை 14 ஜனவரி 2025 – சென்னை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 156 : Thiruvalluvar Year - 2055 - Thai 01 - Tuesday 14 January 2025 - Chennai 16 Pages ₹ 5.00


## ‘எழில் திராவிடம் எழுக!’ என்ற பேரறிஞர் அண்ணாவின் எழுச்சி முழக்கம் எந்நாளும் தொடர –

# தமிழ்நாடு எல்லா நிலையிலும் ஏற்றம் பெற உழைப்போம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பொங்கல் திருநாள் வாழ்த்துச்செய்தி!

**சென்னை, ஜன.14-**

**“ ‘எழில் திராவிடம் எழுக!’ என்ற தமிழ் நாட்டின் தலைமகன் பேரறிஞர் அண்ணா அவர்களின் எழுச்சி முழக்கம் எந்நாளும் தொடர - தமிழ்நாடு எல்லா நிலையிலும் ஏற்றம் பெற உழைப்போம்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள பொங்கல் திருநாள் வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பொங்கல் திருநாள் வாழ்த்துச் செய்தி வருமாறு:-

முத்தமிழ், முச்சங்கம், முக்கனி, மூவேந்தர், முக்கொடி கொண்ட தமிழரின் தனிப்பெரும் பண்பாட்டு விழாவான பொங்கல் திருநாள் மூன்று நாட்களுக்குக் கொண்டாடப்படுகிறது. நானிலம் போற்றும் இந்த நன் நாளினை எழுச்சியோடு இந்தப் புத்தாண்டில் கொண்டாட எதிர்நோக்கியுள்ள உலகத் தமிழர் அனைவருக்கும் எனது அன்பான தமிழர் திருநாள் நல்வாழ்த்துகள்!

பொங்கல் விழா என்பது உழவை, உழைப்பை, சமத்துவத்தை, இயற்கையின் சிறப்பைப் போற்றும் விழா! தமிழரின் பண்பாட்டை, நாகரிகத்தை, வீரத்தைப் பறைசாற்றும் பெருவிழா! விளைச்சலின்



இன்பத்தைப் பகிர்ந்துகொள்ளும் விழா! உற்றார், உறவினர், சுற்றம், நட்பு, ஊரார் உடன் கொண்டாடிக் களித்திடும் விழா!

### துறைதோறும் துடித்தெழுந்துள்ள தமிழ்நாடு!

பள்ளிக்கல்வி தொடங்கி உயர் கல்வி வரை, வேளாண் வளர்ச்சி முதல் தொழில்துறை வளர்ச்சி வரை, பள்ளி சிறார் களுக்கு காலை உணவு தொடங்கி அவர்தம் ஆற்றலையும் அறிவினையும் பெருக்கிட நான் முதல்வன் வரை, மகளிருக்கு உரிமைத்தொகை தொடங்கி மாணவக் கண்மணிகளுக்குத் புதுமைப் பெண், தமிழ்ப்புதல்வன் வரை என மூன்றாண்டுகளில் துறை தோறும் துறை தோறும் துடித்தெழுந்துள்ளது தமிழ்நாடு! பத்தாண்டு காலமாக உறங்கியிருந்த தமிழ்நாடு, இன்றைக்கு வீறு நடைபோட்டு, அனைத்துத் துறைகளிலும் உயர்ந்து நிற்கிறது.

### பரவலான, சமத்துவ வளர்ச்சி!

எந்தப் பிரிவினரும் ஒதுக்கப்படவில்லை; எந்த மாவட்டமும் புறக்கணிக்கப்பட வில்லை; எந்தத் துறையும் பின்தங்கி நிற்கவில்லை என்று நெஞ்சை நிமிர்த்திக் கூறும் அளவுக்குப் பரவலான, சமத்துவமான வளர்ச்சியை அடைந்து காட்டியிருக்கிறோம். நெருக்கடிகள் இல்லாமல் இல்லை; சோதனைகளை எதிர்கொள்ளாமல் இல்லை; இயற்கைப் பேரிடர்கள் தாக்காமல் இல்லை; பாரபட்சத்தால் பாதிக்கப்படாமல் இல்லை! அத்தனையையும் எதிர்கொண்டு சாதித்து வருகிறோம் என்பதுதான் நம் பெருமை! இன்றைக்கு மக்களின் பேராதரவோடு, கருத்தியல் களத்திலும், தேர்தல் களத்திலும் தொடர் வெற்றிகளைக் குவித்து, எதிரிகளின் கனவுகளைத் தவிடுபொடி ஆக்கி வருகிறோம்.

### தனித்துவம் – மகத்துவம் தொடர்ந்து மின்னிடும்!

‘திராவிட மாடல்’ எனும் பாதுகாப்பு வளையம் அமைதி, சகோதரத்துவம், மதநல்லிணக்கம், முற்போக்குச் சிந்தனை, முன்னேற்றப் பாதை, கல்வி வளர்ச்சி எனத் தமிழ்நாட்டை இந்திய அளவில் முன்னணி மாநிலமாக மாற்றி வருகிறது. வெறும் கொண்டாட்ட நிகழ்வாக இருந்த பொங்கல் திருநாளைப் பண்பாட்டுப் படைக்கலனாகவுமே மாற்றிப் பண்படுத்திய இயக்கத்தின் வழிவந்த அரசு நமது அரசு. ஒற்றுமையோடும், வரலாற்று ஓர்மையோடும் நாம் ஒன்றிணைந்து நிற்கும் வரை தமிழ்நாட்டின் தனித்துவமும் மகத்துவமும் இந்திய ஒன்றியத்தில் தொடர்ந்து மின்னிடும்.

### இல்லமெங்கும் மகிழ்ச்சி பொங்கட்டும்!

‘எழில் திராவிடம் எழுக!’ என்று எழுபதாண்டுகளுக்கு முன் முழங்கினார் தமிழ்நாட்டின் தலைமகன் அண்ணா! அத்தகைய எழுச்சியை இன்றைய திராவிட மாடல் அரசு உருவாக்கியுள்ளது. அவ்வெழுச்சி எந்நாளும் தொடர, தமிழ்நாடு எல்லா நிலையிலும் ஏற்றம் பெற உழைப்போம்! உள்ளமெங்கும் இல்லமெங்கும் மகிழ்ச்சி பொங்கட்டும், தங்கட்டும்!

**“உழுவார் உலகத்தார்க்கு ஆணி அஃதாற்றாது**
**எழுவாரை எல்லாம் பொறுத்து”**

என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க, உழுதொழில் செய்வாரே உலகத்தாருக்கு அச்சாணி ஆவார். இதை உணர்ந்த நமது அரசு, “உழவுத் தொழில் போற்றுதும்; உழவரைப் போற்றுதும்!” என்ற அடிப்படையில், உழவர்களின் மலர்ச்சிக்கும், வளர்ச்சிக்கும் தொடர்ந்து துணை நிற்கும். இச்சிறப்புமிகு நன்னாளில் விவசாய பெருங்குடி மக்கள் அனைவரையும் வாழ்த்தி வணங்குவோம்.

அனைவருக்கும் எனது உளம் நிறைந்த பொங்கல் தமிழர் திருநாள் திருவள்ளுவர் நாள் வாழ்த்துகள்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

# ஆளுநர் மாளிகையே! அடங்கு!

சட்டசபைக் கூட்டத்தில் ஆண்டின் தொடக்கத்தில் ஆளுநர் உரையாற்ற வேண்டும் என்பது மரபு. ஆளும் கட்சி, எழுதித் தரும் உரையை வாசிக்க வேண்டும் என்பதே நெறி முறை. இந்தியாவின் பெரும்பாலான மாநிலங்களில் அனைத்து ஆளுநர்களும் இதனையே முறையாகக் கடைப்பிடித்து அரசியலமைப்புச் சட்டப்படி நடந்து கொள்கிறார்கள். ஆர்.என்.ரவியைப் போல் அழிச்சாட்டியம் செய்பவர்கள் ஒரு சிலரே!

**அரசியலமைப்புச் சட்டப்படி நடந்து கொள்ளாதவர் மட்டுமல்ல; சட்டத்தை மீறியே செயல்படுபவர் தமிழ்நாட்டுக்கு ஆளுநராக வந்துள்ளார். நாகலாந்தில் இருந்து விரட்டி விடப்பட்ட அல்லது பயந்து போய் ஓடிவந்து கிண்டியில் ஒளிந்து கொண்டுள்ளவர் இவர்.**

அரசியலமைப்புச் சட்டத்துக்கு விரோதமாக பேசுவது, செயல்படுவது தான் இவரது வழக்கம். ஆனால், ஆளுநர் மாளிகை வெளியிட்டுள்ள ஒரு அறிக்கை, தி.மு.க. அரசை ‘அரசியலமைப்புச்சட்டத்துக்குவிரோதமானதை’ப் போல திசை திருப்பும் வகையில் அமைந்துள்ளது.

**அரசியலமைப்புச் சட்டத்தை சிதைப்பதையே தொழிலாகக் கொண்ட பா.ஜ.க.வின் கூஜா தூக்கி ஒருவர், அரசியலமைப்பு சட்டத்துக்காக கண்ணீர் விடும் காட்சி போலித்தனமானது.**

அவை நடவடிக்கை தொடங்கும் போது தமிழ்த்தாய் வாழ்த்து பாடுவதும், முடிந்ததும் தேசிய கீதம் பாடுவதும் 35 ஆண்டுகளாக தமிழ்நாடு சட்டமன்றத்தில் மரபாக இருக்கிறது. இதில் என்ன குறை கண்டார் ஆர்.என்.ரவி!

தேசியகீதம் பாடக்கூடாது என்று சொன்னோமா? இல்லை. தேசியகீதம் பாடப்படுகிறது. சட்டப்பேரவையில் மட்டுமா பாடப்படுகிறது? அனைத்து அரசு நிகழ்ச்சிகளிலும் பாடப்படுகிறது. முதலமைச்சர் உள்பட அனைவரும் தேசிய கீதத்துக்கு உரிய மரியாதை வழங்கித்தான் வருகிறார்கள். ரவிக்கு முன்னாலும் இதுதான் நடைமுறை. ரவி போனாலும் இதுதான் நடைமுறை. ஆனால் இவர் ஏதோ ‘தேசியத்தின் பிள்ளையாக’ நடிக்கிறார்! ‘மன்னிப்புக் கடிதம்’ கொடுத்து பிரிட்டிஷ் ஆட்சியிடம் கருணை காட்ட வேண்டி நின்ற கூட்டத்தின் சந்ததியான ரவி,



தேசியகீதத்துக்காக உருகுவதை யார் நம்புவார்?

தேசிய கீதம் பாடச் சொன்னாராம், அரசியலமைப்பு சட்ட கடமையை இவர் செய்யச் சொன்னாராம், இதை ‘சிறுபிள்ளைத்தனமானது’ என்று முதலமைச்சர் சொன்னது குற்றமாம். பேச வந்து, பேசாமல் போனதைத்தான் ‘சிறுபிள்ளைத்தனமானது’ என்றார் முதலமைச்சர்.

**உரையை வாசிக்க நாள் குறித்து, கிண்டியில் இருந்து புறப்பட்டு வந்து, அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டு, அவைக்குள் வந்து, வாசிக்கப்போகும் நேரத்தில் வாசிக்காமல் திரும்பி ஓடுவது ‘சிறுபிள்ளைத்தனம்’ அல்லாமல் வேறு என்ன? தேசியகீதம் பாடச் சொல்வதை சிறுபிள்ளைத்தனம் என்று சொல்லவில்லை.**

அரசியலமைப்பு சட்ட அறிஞர்கள், மேதைகள், நீதியரசர்கள் நிறைந்த அவையில் போய் நின்று ரவி, தனது நடத்தையை விவரிக்கட்டும். அவர்கள் என்ன சொல்வார்கள்? இதையே ஆங்கிலத்தில் சொல்வார்கள்! ‘THE HINDU’ நாளிதழ் (7.1.2025) எழுதிய தலையங்கத்தை எடுத்து ஆர்.என்.ரவி வாசிக்கட்டும். சிறுபிள்ளைத்தனமான சேஷ்டையை நூற்றைம்பது ஆண்டு பாரம்பரியம் கொண்ட ஆங்கில நாளிதழ் கண்டித்துள்ளதே. இந்தத் தலையங்கம் படித்தவர்கள் அனைவரும் ரவியை எந்த லிஸ்டில் சேர்ப்பார்கள்?

உடனே, முதலமைச்சர் மீது களங்கம் கற்பிக்கிறது ஆளுநர் மாளிகை. பாரதத்தை ஒரு தேசமாகவும், அதன் அரசியலமைப்பாகவும் ஏற்றுக் கொள்ளாதவர். முதலமைச்சர் என்கிறது அந்த அறிக்கை. அப்படி யாராவது சொன்னோமா? யார் தேசத் துரோகி என்பதும், தேசத்துரோக வரலாறு யாருக்குச் சொந்தம் என்பதும் நாட்டு மக்கள் அறிவார்கள். எங்களுக்கு தேச பக்தியை, ஆர்.என்.ரவியிடம் நாங்கள் கற்க வேண்டிய நிலைமையில் இல்லை.

**‘ஆணவம்’ என்கிறது ஆளுநர் மாளிகை. எது ஆணவம்? ஒரு ரிடையர்டு போலீஸ் ஆபீஸர், பா.ஜ.க.வின் கூஜா தூக்கியாக இருப்பதால், யாரோ ஒருவரின் தயவால் ஆளுநராகி வந்து தமிழ்நாட்டையும், தமிழையும், தமிழ்நாடு சட்டமன்றத்தையும், கோடிக்கணக்கான மக்களையும் கொச்சைப்படுத்தும் வகையில் தினந்தோறும் செயல்படுவது தான் ஆணவம் ஆகும். இங்கிருந்து துரத்தப்பட்டால் சீந்துவாரற்று ஏதோ ஒரு பங்களாவில் பதுங்கி வாழக் கூடிய மாஜி அதிகாரி, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சருக்கு இணையாக அல்லது அவரை விட மேலாக நினைத்துக் கொள்வது ஆணவத்தை விட தான்தோன்றித்தனம்.**

யார் கொடுத்த தைரியத்தில் இந்த ஆணவ ஆட்டத்தை ஆளுநர் மாளிகையில் உட்கார்ந்து போடுகிறீர்?

வரலாற்றின் குப்பைத் தொட்டியில் இப்படி எத்தனையோ பேர் போய் விழுந்து கிடக்கிறார்கள்.

**தாய்த் தமிழ்நாட்டையும், இந்திய நாட்டின் அரசியலமைப்பையும் காக்க எங்களுக்குத் தெரியும். ஆளுநர் மாளிகையே அடங்கு! பிடிக்காவிட்டால் ஓடு!**